உடன்பிறப்பே... 12

தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த கோ.சி.மணி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

ஓவியம் : ரவிபேலட்

கோ.சி.மணி: கொள்கை குணக்குன்று!

1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கழகம் கைப்பற்றி, இந்திய வரலாற்றில் மகத்தான ஜனநாயகப் புரட்சியை நிகழ்த்தியது. அந்தத் தேர்தலில், கழகம் சில தொகுதிகளில் வெற்றிக் கோட்டுக்கு அருகில் வந்து தோல்வியைத் தழுவி இருந்தது. அப்படியான தொகுதிகளில் ஒன்று கும்பகோணம். தோல்வி அடைந்த வேட்பாளர் கோ.சி.மணி.

ஆனால், கழகம் பெற்ற வெற்றிக்காக கும்ப கோணத்தில் பிரமாண்டமாக விழா நடத்தினார் கோ.சி.மணி. சிறப்புரையாற்றிய கழகப் பொதுச் செயலாளர், முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா, “இந்தத் தொகுதி மக்கள் புத்திசாலிகள். அவர்களுக்கு இரண்டு எம்.எல்.ஏக்கள் கிடைத்துவிட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. போலவே, இந்தத் தொகுதி மக்களின் தேவையறிந்து சேவை செய்யக்கூடியவர் என் தம்பி கோ.சி.மணி” என வாழ்த்தினார். அப்படி அண்ணாவின் நம்பிக்கையைப் பெற்ற கழகக் கண்மணி கோ.சி.மணி என்கிற கோ.சிவசுப்பிரமணியன்.

உயிருக்கு நிகராக தலைவன்!

1976-ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டதும் கழக முன்னோடிகள் தேடித் தேடிக் கைது செய்யப்பட்டனர். திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த கோ.சி.மணியிடம், கலைஞ ருக்கு எதிராக வாக்குமூலம் வாங்க முயற்சி நடக்கிறது. பணியவைக்க முடியவில்லை என்பதால், அவரது கண்களைக் கட்டி எங்கோ அழைத்துச் செல்கின்றனர்.

“உயிரையே பறித்தாலும், என் தலைவனுக்கு எதிராக ஒரு சொல்லைக்கூட என்னிடமிருந்து உருவமுடியாது” என சீறி நின்ற கோ.சி.மணியின் நெஞ்சுரத்துக்கு முன் ஒன்றும் செய்ய முடியாமல் நின்றது காவல்துறை. வேறுவழியின்றி சேலம் மத்திய சிறையில் இறக்கிவிட்டுச் சென்றனர் அந்த ஏற்பாட்டாளர்கள். இப்படி, அண்ணாவின் நெஞ்சிலும், கலைஞரைத் தனது நெஞ்சத்திலும் ஏந்தித் திகழ்ந்த கொள்கைச் சிங்கம்தான் கோ.சி. மணி.

கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டங்களில் தோழர் ஜி.எஸ்.மணி என அழைக்கப்பட்டு வந்தார். கம்யூனிஸ்ட் தோழர்களுடன் நெருக்கமாக இருந்த அவர், அக்கட்சியின் உறுப்பினராக இருக்கவில்லை. ராஜாஜி ஆட்சியின்போது காஞ்சிவாய் என்கிற கிராமத்தில் தோழர்களைத் தேடி, காவல்துறை அந்த ஊரையே சுற்றி வளைத்துத் தாக்கி ஆண் களையெல்லாம் கைது செய்தபோது, அரைக்கால் சட்டை அணிந்த இளைஞனாக கோ.சி.மணியும் காவல் வாகனத்தில் ஏற்றப்பட்டார். அதனால்தான், ‘மேக்கிரிமங்கலத்தின் போக்கிரி’ என கோ.சி.மணியை கலைஞர் செல்லமாகக் கூறுவார்.

கொள்கைச் சிங்கம்

கழகம் தொடங்கப்பட்ட நாள் முதலே அதன் உறுப்பினராக இருந்தவர் கோ.சி.மணி. இன்றைய மயிலாடுதுறை மாவட்டத்தில், மேக்கிரிமங்கலம் என்கிற சிற்றூரில் 1929-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் கோவிந்தசாமி- அஞ்சலையம்மாள். கோ.சி.மணியின் தந்தையார் சிறு விவசாயியாக இருந்தார். சிறு குத்தகைக்காரர் என்பதால், விளைச்சல் பெரும்பாலும் வீடு சேராது. அப்படியான சூழலில் அந்த ஊரில் ஆரம்பக் கல்வியும், பக்கத்து ஊரான தேரழுந்தூரில் உயர்நிலைக் கல்வியும் படித்து முடித்தார். கல்வி அறிவும், காட்சி அனுபவமும் சேரச் சேர அவருக்குள் கேள்விகள் முளைக்கத் தொடங்கின.

நில உரிமையாளர்களின் அக்கிரமம், சாதியின் பெயரால் நிகழ்த்தப்படும் ஆதிக்கம், அடக்குமுறைகளைக் கண்டு அறச்சீற்றம் எழ, அந்தத் தேடல் அவரை மக்களுக்கான அரசியல் பக்கம் இழுத்துச் செல்கிறது. அதிகாரத்தை எதிர்க்க மக்கள் ஒன்று திரள வேண்டும் என இடதுசாரி களோடும், திராவிடர் கழகத்தோடும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறார். தஞ்சை மாவட்ட திராவிடர்கழக முன்னோடியான ராஜகிரி தங்கராசு இவரை, திராவிடர் கழக உறுப்பினர் ஆக்கினார்.

துடிப்பான 17 வயது இளைஞனாக பகுத்தறிவுப் பிரசாரத்துக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மணி, பண்ணை ஆண்டைகளுக்கு எதிராக மக்களிடம் அரசியல் பேசத் தொடங்கினார். அதற்காக, தனது உறவினரான மொத்த குத்தகைக்காரர் ஒருவரிடம் பார்த்து வந்த வேலையை உதறியதுடன், அவருக்கு எதிராகவே கலகத்தையும் தொடங்கினார். விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் வேலைபார்க்கத் தொடங்கிய அந்தப் போர்க்குணமிக்க இளைஞன், கழகத்தின் வரலாற்றில், அண்ணாவின் நெஞ்சிலே இடம் பிடிக்கத் தொடங்கினார்.

களப்போராளி மணி

தீவிர களப்போராளியாகத் திகழ்ந்தவர் கோ.சி. மணி. **‘மதி நாடக மன்றம்’** என ஒரு மன்றத்தைத் தொடங்கி, மயிலாடுதுறை, கும்பகோணம் சுற்றுவட்டாரங்களில் கழகப் பிரசாரங்களை முன்னெடுத்துச் சென்றார். கழகத்தின் போர்வாள் சி.பி.சிற்றரசு அவர்களின் ‘போர்வாள்’ நாடகத்தை அப்பகுதி முழுவதும் கொண்டு சென்றார்.

மக்கள் சக்தியை ஆக்கப் பணிகளுக்குத் திருப்பி விடுவதிலும் வல்லவராக இருந்தார். அப்படி அவர் தனது சொந்த ஊரான மேக்கிரி மங்கலத்தின் நடுவில் அமைந்துள்ள குளத்தை மக்களைத் திரட்டி ஆழப்படுத்திய செய்தியை, அந்த காலத்திலேயே ‘முரசொலி’ இதழில் படத்துடன் வெளியிட்டுள்ளார் கலைஞர்.

- 1949, 52, 55 என கழகத்தின் முதல் மூன்று செயற்குழுக்களிலும் உறுப்பினராக இருந்தார்.
- இளங்காரங்குடி கிளைக் கழகப் பொருளாளர்.
- மயிலாடுதுறை வட்டக் கழகச் செயலாளர்.
- மேக்கிரிமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர்.
- திருவிடைமருதூர் ஒன்றியச் செயலாளர்.
- ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயலாளர்-தஞ்சை மண்டலப் பொறுப்பாளர்.
- 5 முறை சட்டமன்ற உறுப்பினர்.
- 2 முறை சட்டமேலவை உறுப்பினர்.
- 3 முறை அமைச்சர்.

கடத்தலை நிறுத்தியவர்

1962-ஆம் ஆண்டுத் தேர்தலில் கழகம் பெற்ற 50 வெற்றிகளில், ஆடுதுறையில் இருந்து கோ.சி. மணி எடுத்துச் சென்றதும் ஒன்று. கழகத்தின் கொள்கை, கோட்பாடு, தனது பேச்சாற்றல், கலைஞரின் பிரசாரம், மக்களின் அன்பு ஆகியவையே அவரை எதிர்த்து நின்ற பெரும் செல்வந்தரான இராமாமிர்த தொண்டைமான் என்கிற உழைப்பாளியை, காங்கிரஸ் தியாகியை வீழ்த்தியது.

மணி சட்டமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த அந்தக் காலகட்டத்தில், காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் தலைவிரித்து ஆடியது. மக்கள் உணவுக்குத் தவித்த காலத்தில், தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளில் அரிசிப் பதுக்கல்காரர்கள், கிழங்கு மாவு, தவிடு என்கிற பெயர்களில் மூட்டை மூட்டையாக கேரளாவுக்குக் கொண்டு சென்றனர். அது குறித்து சட்டமன்றத்தில் குரல் எழுப்பி சமூக விரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்தச் செய்தார்.

சில நேரங்களில் கழகத் தோழர்களுடன் சென்று தானே தடுத்து நிறுத்தியுமிருக்கிறார். *1967*-ஆம் ஆண்டு கும்பகோணம் தொகுதியில் நின்ற அவரை வீழ்த்தியது அந்த கடத்தல்காரர்கள்தான். ஆனாலும், அவரை மேலவை உறுப்பினராக்கி அழகுபார்த்தார் நமது அண்ணா.

ஆணிவேரும் சல்லி வேரும்

கோ.சி.மணியின் உழைப்பை அறிந்த முத்தமிழறிஞர் கலைஞர், *1971*-ஆம் ஆண்டில் அவரை கும்பகோணம் மத்திய வங்கித் தலைவராக நியமித்தார். அங்கு பல சீர்திருத்தங்களைச் செய்து, கூட்டுறவு வங்கி அமைப்பை மக்களுக்கான தாக மாற்றிக் காட்டினார். கழகத்தின் ஆணிவேர் கலைஞர் என்றால், சல்லி வேர்களாக பற்றி நிற்கும் தம்பி அவர்.

1983 -ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயலாளராக அவரைக் கொண்டு வந்தார். அதற்குப் பின் அமைந்த ஆட்சிகளில் கூட்டுறவு, வேளாண்மை, உள்ளாட்சித் துறை அமைச்சர் என பொறுப்பு வகித்து, அவற்றிலும் தனது முத்திரைகளைப் பதித்திருக்கிறார் இந்த தஞ்சை தளகர்த்தர். *2016*-ஆம் ஆண்டில், தனது *87* வது வயதில் இவர் மறைந்தபோது, ‘கோ.சி.மணி இல்லாத தஞ்சை மண்ணை என்னால் குன்றிமணி அளவு கற்பனை செய்தாலும், குலை நடுங்குகிறதே’ என இரங்கற்பா வடித்தார் கலைஞர். கலைஞரின் சொற்களிலே சொல்வதெனில், ‘கொட்டியும் ஆம்பலும்போல உறவாடி கொள்கை காத்த குணக்குன்று’ கோ.சி.மணி. அவர் வாழ்க்கை, கழகத்தவருக்கு அரசியல் பாடம்.

...துடிக்கும்

‘ட்ரில்லியன்’ கனவு... ‘ட்ராகன்’ தொடர்பு...!

ஒரு ட்ரில்லியன் பொருளாதாரத்தை நோக்கி தமிழ்நாடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. உலகெங்கிலும் இருந்து தமிழ்நாட்டுக்கு முதலீடுகள் வந்துகொண்டேயிருக்கின்றன. இதன் மூலம் நம் மாநிலத்தில் பொருளாதாரமும் வேலைவாய்ப்பும் அதி கரித்துக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், வருங்கால லட்சியங்களை வென்றெடுக்க ஊக்கம் தரும் கடந்த காலப் பெருமைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சமீபத்தில், கங்கைகொண்டசோழபுரம் மாளிகை மேடு பகுதியில், தொல்லியல் துறை மேற்கொண்டிருக்கும் அகழாய்வில் சீனாவுடன் பண்டைய தமிழ்நாடு மேற்கொண்டிருந்த வணிகத் தொடர்புகள் புலப்படுகின்றன.

இந்த அகழாய்வில் சீன நாட்டின் பீங்கான் துண்டு, சுடுமணல் முத்திரைகள் ஆகியவை கிடைத்துள்ளன. பதினொன்றாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டுடனான சீன வணிகத் தொடர்புகளுக்கும், அன்றைய செலாவணியிலிருந்த பலவகையான காசுகளை உருவாக்கும், உருக்கு சாலைகள் அமையப்பெற்றிருந்தமைக்கும், அரசின் நடைமுறைகளில் பின்பற்றப்பட்ட அரச முத்திரைகள் குறித்தும் தெரிவிக்கும் தரவுகளாக மேற்சொன்னப் பொருட்கள் இருக்கின்றன.

11-ஆம் நூற்றாண்டில் உலக வணிகத்தில் முக்கியப் பகுதியாகத் தமிழ்நாடு இருந்துள்ளதை இது போன்ற சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. 21-ஆம் நூற்றாண்டில் அப்படியான ஒரு நிலையை நோக்கிய பயணமாக தமிழ்நாட்டின் ஒரு ‘ட்ரில்லியன் டாலர்’ கனவு அமையும்.

ஃப்ளாஷ்பேக்



சித்திக் அமின்

திருமணத்துக்குத் தலைமை!

மதுரை மாநகர மாவட்டச் செயலாளராக இருந்த என் தாத்தா கே.தாவூது, தி.மு.க. அலுவலகத்தைத் தன் சொந்த முயற்சியில் இடம் வாங்கிக் கட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் திறந்து வைத்தார். என் தாய் தந்தையருக்கு (நாகூர் அனீபா (எ)ஆசைத்தம்பி, எம்.மைமூன் கதிஜா) தாத்தாவின் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், இஸ்லாமிய முறைப்படி அல்லாமல் திராவிட முறைப்படி சுயமரியாதைத் திருமணமே நடைபெற்றது. அப்போது எடுத்த புகைப்படம் இது.

-என்.சித்திக் அமின்
தாவூது,
பகுதி இளைஞரணி
துணை அமைப்பாளர்,
கே.கே. நகர், மதுரை.

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

கருவூலம்

கழகம் காத்த தனயன்

1963-ஆம் ஆண்டு, ஜனவரி 17. கழகத்தின் மூல முழக்கமான ‘திராவிட நாடு’ கோரிக்கையை சட்ட விரோத மாக்கும் வகையில் அரசியல் சட்டத் திருத்தம் செய்ய, நாடாளுமன்றம் முடிவு செய்தது. அந்த நாளில் கலைஞரின் தாயார் அஞ்சுகம் அம்மையார் நோய் வாய்ப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தார். அந்த நிலையிலும், அன்று மாலையே ராயபுரத்தில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார் கலைஞர். காலையிலிருந்து மாலை வரை தாயாரின் உடல்நலம் குறித்து ரத்தக்கண்ணீர் வடித்த கண்களில், கழகத்துக்கு நெருக்கடி என்றதும் தீப்பொறி தெறித்தது.

திராவிடத்தால் வாழ்கிறோம் 165



எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131